# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-5 Taluk :
Case No. : **O.S.** 492/2019 Date : 25.04.2024
Name : அனிதா (முதுநிலை வருவாய் ஆய்வாளர்) Nationality : Indian
Religion :
Father's/Husband's Name : Age : 40
Village :

வா.சா.5

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியருக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை அனுப்பப்பட்டதின்பேரில் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியரால் எனக்கு சாட்சியம் அளிக்க அதிகார கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள கும்பகோணம் வருவாய் கோட்ட அலுவலர் செயல்முறைகள் ந.க.13/2023/அ 4 தொடர்புடைய கோப்பு மற்றும் ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். 03.05.2023 ம் தேதி சோழபுரம் காவல் நிலைய சரக காவல் ஆய்வாளரால் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்படி செயல்முறையில் கண்ட நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. ( **மேற்படி புகாரின் உண்மை நகல் சாசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி நடவடிக்கையில் 22.05.2023 ம் தேதி அணக்குடி கிராம நிர்வாக அலுவலர் வருவாய் கோட்டாட்சியருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார். ( **மேற்படி வாக்குமூலத்தின் உண்மை நகல் சாசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி நடவடிக்கையில் 02.06.2023 ம் தேதி திருவிடைமருதூர் வட்டாட்சியர் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியருக்கு அறிக்கை அளித்துள்ளார்.

**( மேற்படி அறிக்கையின் உண்மை நகல் சாசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி நடவடிக்கையில் 02.06.2023 ம் தேதி திருவிடைமருதூர் மண்டல துணை வட்டாட்சியர் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியருக்கு அறிக்கை அளித்துள்ளார். **( மேற்படி அறிக்கையின் உண்மை நகல் சாசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி நடவடிக்கையில் 02.06.2023 ம் தேதி திருவிடைமருதூர் வருவாய் ஆய்வாளர் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியருக்கு அறிக்கை அளித்துள்ளார். **( மேற்படி அறிக்கையின் உண்மை நகல் சாசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி நடவடிக்கையில் 02.06.2023 ம் தேதி அணக்குடி கிராம நிர்வாக அலுவலர் கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியருக்கு அறிக்கை அளித்துள்ளார். **( மேற்படி அறிக்கையின் உண்மை நகல் சாசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ( மேந்படி சாசாஆ 5 முதல் சாசாஆ 10 வரையிலான ஆவணங்கள் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) மேற்படி வாக்குமூலம் அறிக்கைகளை பரிசீலித்துதான் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்படி நடவடிக்கையில் MC.162/2023/அ 4 ல் 03.06.2023 ம் தேதி கும்பகோணம் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார். **( மேற்படி உத்தரவின் உண்மை நகல் சாசாஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.